பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

12 07 2026 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பொருளாதார வளர்ச்சியுடன் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதிலும் மத்திய அரசு கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் வகையில், நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.
- பத்திரப்பதிவுத் துறையில் மக்களின் கோரிக்கைகள் குறித்து பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் கூறியுள்ளார்.
- பிரபல திரைப்பட பின்னணிப் பாடகி எஸ். ஜானகி மைசூருவில் காலமானார்.
- இங்கிலாந்திற்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 269 ரன் முன்னிலை பெற்று வலுவான நிலையில் உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பொருளாதாரம், சுற்றுச்சூழல் போன்ற அம்சங்களில் கவனம் செலுத்துவதுடன், இந்தியா தனது கலாச்சார பாரம்பரியத்தையும் பாதுகாத்து வந்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த பயணத்தின் போது அளிக்கப்பட்ட சிறப்பான அன்பிற்காக நியூசிலாந்து பிரதமர் திரு லக்சன், அந்நாட்டு அரசு மற்றும் மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு இந்தியப் பிரதமர் மேற்கொண்ட இந்தப் பயணம், இரு நாடுகளின் உறவில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியா - நியூசிலாந்து இடையேயான உத்திசார் ஒத்துழைப்பு, வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, கல்வி, கலாச்சாரம், விளையாட்டு, மக்கள் தொடர்பு போன்ற துறைகளில் ஏற்பட்டுள்ள புதிய உத்வேகம் போன்றவை இவ்விரு நாடுகளின் நட்புறவு மேலும் வலுவடைந்து வருவதை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளது என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<>>>>**

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டும் வகையில், நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் காரணமாக பொருளாதாரம், தொழில்துறை, சுற்றுலா, வேலைவாய்ப்பு ஆகியவை உத்வேகம் பெறும் என்று கூறினார்.

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ரயில்வே திட்டப் பணிகளுக்காக மத்திய அரசு கடந்த நிதியாண்டில் 8 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

மாநிலம் முழுவதும் 75 ரயில் நிலையங்கள் மத்திய அரசின் அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டு வருவதாக டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<>>>>

பத்திரப்பதிவுத் துறையில் மக்களின் கோரிக்கைகள் குறித்து பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளின் நிலை குறித்து அவர் ஆய்வு செய்தார்.

பத்திரப்பதிவுத் துறையில் ஆன்லைன் நடைமுறை பின்பற்றப்படுவதால் அதிகாரிகளின் கையெழுத்திட்ட ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும் என்று திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் தற்போது நேர்மையான ஆட்சி நடைபெற்று வருவதாக மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. மாணிக்கம் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் ஒருங்கிணைந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சி ஆக்கப்பூர்வமான கட்சியாக செயல்படும் என்று திரு. மாணிக்கம் தாக்கூர் கூறினார்.

<<<<>>>>

இலவச வேட்டி-சேலை உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை

வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 2 ஆண்டுகளாக பொங்கல் பண்டிகையின்போது பொதுமக்களுக்கு வழங்கப்படும் இலவச வேட்டி-சேலை உற்பத்திக்கான 80 கோடி ரூபாய் நிலுவைத் தொகையை கூட்டுறவு சங்கங்களுக்கு விடுவிப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

பிரபல திரைப்பட பின்னணிப் பாடகி எஸ். ஜானகி நேற்று மைசூருவில் காலமானார். அவருக்கு வயது 88.

பதினேழு மொழிகளில் 48 ஆயிரத்திற்கும் அதிகமான திரைப்படப் பாடல்களைப் பாடி ரசிகர்கள் மனதில் நீங்காத இடம் பிடித்துள்ளார்.

செந்தூர பூவே என்ற பாடலுக்காக சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருது 1988-ம் ஆண்டு அவருக்கு வழங்கப்பட்டது.

(Sound Byte - செந்தூரப் பூவே பாடல் - 46 Sec)

நான்கு தேசிய விருதுகள், முப்பத்து மூன்று மாநில விருதுகள், மற்றும் பத்ம பூஷன் விருதும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அவரது மறைவிற்கு குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மத்திய தகவல், ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன், தமிழ்நாடு, கேரளம், கர்நாடகா, ஆந்திர பிரதேசம், தெலங்கானா ஆகிய ஐந்து மாநில முதலமைச்சர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், திரைப்படத் துறையினர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**<<<<>>>>**

Swiggy நிறுவனத்தின் செயல்பாடுகள் மீதான வாடிக்கையாளர்களின் புகார்களை அடுத்து, இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலை ஆணையம் அந்நிறுவனத்திற்கு நோட்டீஸ் வழங்கியுள்ளது.

சமூக வலைதளத்தில் அந்த ஆணையம் வெளியிட்டுள்ள பதிவில், இதுதொடர்பாக விரிவான விளக்கம் அளிக்குமாறு அந்நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், விதிமுறைகளைப் பின்பற்ற தவறும்பட்சத்தில் அந்நிறுவனத்தின் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த ஐந்து தினங்களுக்கு லேசான மழை பெய்யக்கூடும் என்று அந்த மைய தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தென் தமிழகக் கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், அடுத்த இரு தினங்களுக்கு அப்பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

ஹோர்முஸ் நீரிணைப் பகுதியில் செல்லும் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

<<<<>>>>

ஸ்பெயினில் நிலவி வரும் கடும் வெப்பம் காரணமாக ஏற்பட்டுள்ள காட்டுத் தீயில், 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

<<<<>>>>

சீனாவில் Bavi சூறாவளி காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து ஆறு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் பொது சிவில் சட்ட வரைவு மசோதாவை ஆய்வு செய்வதற்காக 9 உறுப்பினர்கள் கொண்ட குழுவை அம்மாநில அரசு அமைத்துள்ளது.

<<<<>>>>

தனிநபர் வருமானத்தில் சிக்கிம் மாநிலம் நாட்டின் முன்னணி மாநிலமாக மீண்டும் உருவெடுத்துள்ளதாக அண்மையில வெளியிடப்பட்ட ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

திருப்புத்தூர் மாவட்டம் ஆயுதப்படை வளாகத்தில், பருவமழை, பேரிடர் காலங்களில், மீட்பு மற்றும் அவசரகாலப் பணிகளில் காவலர்கள் திறம்பட செயல்படுவது குறித்த சிறப்புப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டத்தில் முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு மேலும் 5 காசுகள் உயர்த்தப்படுவதாக தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் மண்டல அலுவலகம் தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகேயுள்ள மோசூர் ரயில்வே கேட் பழுதானதால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

**<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

இங்கிலாந்திற்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், இந்தியா 269 ரன் முன்னிலை பெற்று வலுவான நிலையில் உள்ளது.

லண்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 21 ரன் என்ற முந்தையநாள் ஸ்கோருடன் ஆட்டத்தைத் தொடங்கிய இங்கிலாந்து, தனது முதல் இன்னிங்சில் 170 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதனையடுத்து, தனது இரண்டாவது இன்னிங்க்ஸை ஆடி வரும் இந்தியா, இரண்டாம் நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 154 ரன் எடுத்தது.

இந்தியா தனது முதல் இன்னிங்சில் 285 ரன் எடுத்தது.

<<<<>>>>

உலகக்கோப்பை வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் Prithika Pradeep வெண்கலப் பதக்கம் வென்றார்.

ஸ்பெயினின் Madrid-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் தனிநபர் பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

<<<<>>>>

திருவாரூர் மாவட்டம் வடுவூர் மேல்பாதியில் தென்னிந்திய அளவிலான கபடிப் போட்டி நேற்று தொடங்கியது. இந்தப் போட்டியில் 19 அணிகள் பங்கேற்கின்றன.

<<<<>>>>